**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4309/ஆ5/2023, நாள்.20.10.2023**
**.....**

பொருள் பள்ளிக் கல்வி – தென்னிந்திய அறிவியல் நாடக விழா 2023 (Southern India Science Drama Festival 2023) – மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா நடத்துதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.45461/எம் /எஸ்2 / 2023, நாள். 10.10.2023

**.....**

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், 23.11.2023 மற்றும் 24.11.2023 ஆகிய தேதிகளில் பெங்களூரு விஸ்வே ஸ்வராயா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியத்தில் தென்னிந்திய அறிவியல் நாடக விழா நடத்தப்படும் எனவும் இது தொடர்பாக மாவட்ட அளவில் அறிவியல் நாடக விழா (Science Drama Festival 2023) நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பள்ளிகளில் 8ம் வகுப்பு முதல் 10ம் வகு ப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கீழ்காணும் படி மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா (Science Drama Festival 2023) நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

**மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா (Science Drama Festival 2023)**
**நாள்– 30.10.2023 (திங்கட்கிழமை)**
**நேரம் – காலை 9.30 மணி**
**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல் நிலைப்பள்ளி, வேலூர்.**

**மாவட்ட / மாநில அளவிலான அறிவியல் நாடகப் போட்டிக்கான விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன . இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு விவரங்களை மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் . மாவட்ட அளவிலான அறிவியல் நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர்கள் மாநில அறிவியல் நாடக விழா 2023–ல் பங்கேற்பார்கள் .** அதேபோல் தென்னிந்திய அறிவியல் கண்காட்சியின் முதல் மற்றும் இர ண்டாவது வெற்றியாளர்கள் ஜனவரி 2024ல் மும்பையில் உள்ள நேரு அறிவியல் மையத்தில் தேசிய அறிவியல் அருங்காட்சியகம் நடத்தும் மையத்தில் தேசிய அளவிலான அறிவியல் நாடக விழாவில் ப ங்கேற்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

என மேற்காணும் படி குறிப்பிட்டுள்ள நாளி ல் நடைபெறும் மாவட்ட அளவிலான அறவியல் நாடக விழாவில் 8ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் ஒரு பொறுப்பாசிரியருடன் கலந்துகொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை நடுநிலை /உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு** – பார்வையின் படி பெறப்பட்ட இணைப்பு

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை /
மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள். வேலூர் மாவட்டம்.
நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி /தனியார் பள்ளிகள் ) வேலூர் மாவட்டம். (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. தலைமையாசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர். (போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )